**CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)**

**03.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் இல்லை)**

**PW.1 : திருமதி. மாரியம்மாள், க/பெ. கோவிந்தன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பாப்பம்பட்டி காட்டுவளைவில் குடியிருந்து கூலிவேலை செய்துவருகிறேன். எதிரிகள் மாதையன், கோபால், காமராஜ், ரமேஷ், ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரும் என்னுடைய பக்கத்து நிலத்துக்காரர்கள் ஆவார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. 2016ம் வருடம் ஒருநாள் பாப்பம்பட்டி காட்டுவளைவில் நாராயணன் வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றில் தண்ணீர் பிடிப்பதற்காக நான் சென்றபோது எதிரி மாதையன் எங்களுடைய காட்டில் வேலி போட்டு தடத்தை மரித்திருந்தார். அதை எடுத்து போட்டுவிட்டு தண்ணீர் பிடிப்பதற்காக காலை சுமார் 06.30 மணிக்கு நடந்துசென்றபோது எதிரிகள் மாதையன், கோபால், காமராஜ், ரமேஷ், ஆகியோர்கள் என்னை வழிமறித்தனர். நான் தண்ணீர் எனக்கு தேவைப்படுகிறது. மோட்டரில் சென்று தண்ணீர் பிடித்துவிட்டு பின்னர் பேசிகொள்ளலாம் என்று கூறினேன். அதற்கு எதிரி மாதையன் என்னை பார்த்து உன் மண்டையை உடைத்துவிடுவேன் என்றும், கொலை செய்துவிடுவேன் என்றும் மிரட்டினார். உன்னுடைய கணவன் மற்றும் மகனை கூப்பிடு இல்லையென்றால் உன் மண்டையை உடைத்துவிடுவேன் என்றும், கெட்ட கெட்ட வார்த்தையால் என்னை திட்டினார். கணவர் மற்றும் மகனை நீ வரவழைக்கமாட்டாய் என்றும், கம்பியை எடுத்துகொண்டு மாதையன் என் தலையின்மீது தாக்கினார். அவருடைய அப்பா எதிரி கோபால் கட்டையால் என் முதுகின்மீது தாக்கினார். எதிரி காமராஜ் கல்லால் என் இடுப்பின்மீது தாக்கினார். எதிரி விஜி என்னுடைய வலது தொடையின் மீது தாக்கினார். எதிரி ரமேஷ் என் முடியை பிடித்து இழுத்து என்னுடைய ஜாக்கெட்டை பிடித்து கிழித்துவிட்டார். எதிரிகள் அனைவரும் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே நான் மயக்கமாகிவிட்டேன். எதிரிகள் என்னை தாக்கிய ஆயுதங்களை அவர்களே எடுத்து சென்றுவிட்டனர். சரவணன் என்பவர் என்னை தொப்பூர் GHல் சேர்த்தார். பின்னர் மேல்சிகிச்சைக்காக தருமபுரி GHக்கு அனுமதிக்கப்பட்டேன். அப்போது போலிசார் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பதிவுசெய்தனர். அந்த புகார் வாக்குமூலம் **<u>அ.த.சா.ஆ.1</u>** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

**<u>குறுக்குவிசாரணை</u>** – எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

**CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)**

**03.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் இல்லை)**

**PW.2 : திரு. கோவிந்தன், த/பெ. அருணாச்சலம்**

**முதல் விசாரணை**

நான் பாப்பம்பட்டி காட்டுவளைவில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். எதிரிகள் மாதையன், கோபால், காமராஜ், ரமேஷ், ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் பொதுவழி தகராறு சம்மந்தமாக எதிரிகள் வேலி போட்டிருந்தார்கள். சம்பவத்தன்று என்னுடைய காலை சுமார் 07.00 மணிக்கு என்னுடைய மனைவி நாராயணன் வீட்டு கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக சென்றபோது எதிரிகள் அனைவரும் சேர்த்து என்னுடைய மனைவியை அடித்துவிட்டார்கள். சத்தம்கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரிகள் கோபால் என்னுடைய முதுகின்மீது கட்டையால் அடித்தார். எதிரி காமராஜ் கையால் என்னுடைய நெஞ்சின்மீது தாக்கினார். விஜி முதுகின்மீது கையால் தாக்கினார். ரமேஷ் காலால் என்னுடைய வயிற்றின்மீதும், காலின்மீது உதைத்தார். காயம்பட்ட என்னை ஊர்கவுண்டர் ஞானவேல் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். மருத்துவமனையில் இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை** – எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.298/2016 (JM.No.II, DHARMAPURI)

03.09.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் இல்லை)**

**PW.3 : திரு. கணேசன், த/பெ. கோவிந்தன்**

**முதல் விசாரணை**

நான் பாப்பம்பட்டி காட்டுவளைவில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறேன். எதிரிகள் மாதையன், கோபால், காமராஜ், ரமேஷ், ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது அப்பா ஆவார். 24.01.2016ம் தேதி காலை சுமார் 07.30 மணிக்கு பொதுவழித்தடம் பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் மாதையன், கோபால், காமராஜ், ரமேஷ் ஆகியோர்கள் சேர்ந்துகொண்டு என்னுடைய அம்மா, அப்பாவை அடித்துவிட்டார்கள். எதிரி மாதையன் கம்பியால் என்னுடைய அம்மாவின் தலையின் மீது தாக்கினார். எதிரி கோபால் கட்டையால் தலையின் மீது அடித்தார். எதிரி காமராஜ் இடுப்பு மற்றும் முதுகின்மீது கையால் தாக்கினார். எதிரி ரமேஷ் தகாத வார்த்தையால் பேசி என்னுடைய அம்மாவின் தலை முடியை பிடித்து இழுத்து ஜாக்கெட்டை கிழித்து அடித்துவிட்டார். அதைக்கேட்க சென்ற என் அப்பாவை எதிரி கோபால் என்பவர் கட்டையால் தாக்கினார். எதிரி காமராஜ் கையால் என் அப்பாவை அடித்தார். நான் மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன். ஊர்கவுண்டர் சரவணன் தான் என் அப்பா மற்றும் அம்மாவை தொப்பூர் GHல் சேர்த்தார். பின்னர் மேல்சிகிச்சைக்காக தருமபுரி GHல் சேர்த்தார். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை** – எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.